செ.வெ.எண்.25 நாள்.09.10.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தொடர்பான – முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் – மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வருகை தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக சாரல் அரங்கில் இன்று **(09.10.2017)** நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஒவ்வொரு அரசுத் துறைகளின் சார்பிலும் வழங்கப்படவுள்ள நலத்திட்ட உதவிகள் குறித்தும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள கட்டடங்கள் மற்றும் திட்டப் பணிகள் குறித்தும், புதிதாக அடிக்கல் நாட்டப்படவுள்ள வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும், திருநெல்வேலி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக புதிதாக அறிவிக்கப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்தும், விரிவாகத் துறை அலுவலர்களுடன் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக ஆலோசனை செய்தார்கள். மேலும், விழா தொடர்பாக முன்னேற்பாடு பணிகள் ஒவ்வொரு துறையிலும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் விரிவாக ஆலோசனை செய்தார்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது–

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா திருநெல்வேலி மாவட்டத்தில் **13.11.2017** அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கவும், பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்கள். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு புதிய திட்டங்களையும் அறிவிக்கவும் உள்ளார்கள். இவ்விழாவில், வருவாய்த் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, சமூக நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, கூட்டுறவுத் துறை, ஊரக வளர்ச்சி முகமை, வேளாண்மைத் துறை, கல்வித் துறை, தொழிலாளர் நலத்துறை, தொழில் வணிகத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, முன்னாள் படைவீரர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் அதிகளவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். புதிதாக கட்டப்பட்டு, திறக்கப்பட தயார் நிலையில் உள்ள கட்டடங்கள் மற்றும் பணிகள் முடிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகள் விவரங்களையும், புதிதாக அடிக்கல் நடப்பட வேண்டிய திட்டப் பணிகள் குறித்த விவரங்களையும் தயார் செய்திட வேண்டும்.

இவ்விழாவில், பொதுமக்கள் அதிகளவில் வந்திருந்து சிறப்பிக்கவுள்ளதால், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும், பாதுகாப்பு வசதிகளையும் சிறப்பாக செய்திட வேண்டும். தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. அனைத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பாக விழா முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு தமிழகத்திலேயே திருநெல்வேலி மாவட்டத்தில் தான் இவ்விழா மிக, மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது என்ற பெருமையை தேடித்தரும் வகையில் சிறப்பாக செயல்பட வேண்டும் என பேசினார்.

அதனைத் தொடர்ந்து, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ள இடம் தேர்வு செய்வது தொடர்பாக பாளையங்கோட்டை நிதிமன்றம் அருகில் உள்ள பெல் மெட்ரிக் பள்ளி வளாகத்தினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடன் சென்று பார்வையிட்டனர்.

இக்கூட்டத்தில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தி முருகேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் (அம்பாசமுத்திரம்) திரு.ஆர்.முருகையாபாண்டியன், (தென்காசி) திரு.செல்வமோகன்தாஸ்பாண்டியன், (வாசுதேவநல்லூர்) திரு.அ.மனோகரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்தி குமார்,இ.கா.ப., மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுணா சிங்,இ.கா.ப., சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாநில கூட்டுறவு விற்பனை இணைய துணைத் தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜு, பாளை நகர கூட்டுறவு சங்க தலைவர் திரு.சுதா பரமசிவம், தமிழ்நாடு வீட்டுவசதி இணைய பெருந்தலைவர் திரு.சக்திவேல் முருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி–தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் சங்க தலைவர் திரு.ஆறுமுகம், அக்ரோ தலைவர் திரு.மகபூப்ஜான் மற்றும் முக்கிய பிரமுகர்கள் திரு.பரணி சங்கரலிங்கம், திரு.சுதா பரமசிவம், திரு.கபேரியல் ராஜன், திரு.செவல் முத்துசாமி, திரு.ஜெரால்டு, திரு.செந்தில் ஆறுமுகம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.